A/L 90
கலே/வர்த்தகம்
விஞ்ஞானம்
Nov 7ல் புதிய பிரிவு ஆரம்பம்
சகல பாடங்களும் அலகு 01 இலிருந்து ஆரம்பமாகும்.
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலே.

# உதயன்

விலை ரூ 2/-

O/L 88
வினு விடை வகுப்புக்கள்
காலே 8.00—பி ப. 1.00
குறிப்பிட்டளவு மாணவர்களே மேலும் சேர்வதற்கு இடவசதி உண்டு.
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
இருபாலே.

சுடர்: 4 யாழ்ப்பாணம் விபவ ஞூ கார்த்திகை மீ 17 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. ஆகிர் பிறை 21 ( 02 - 12 - 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 6

## பதிவு செய்யப்பட்டோரின் எண்ணிக்கையை விட

# அதிகளவு வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படுகின்றன?

## ஜனுதிபதி தேர்தலில் முறைகேடு

### தேர்தல் ஆணையாளரிடம் சு.க. முறையீடு

கொழும்பு, டிசம்பர் 2

ஜனுதிபதித் தேர்தல் ஏற்பாடுகளில் பெரும் முறை கேடுகள் இடம்பெற்று வருவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி குற்றம் சாட்டியிருக்கிறது. இது தொடர்பாக கட்சியின் பிரதிநிதிகள் குழு ஒன்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வாவை நேரடியாகச் சந்தித்து முறையீடு செய்திருக்கிறது

பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையிலும் பார்க்க அதிகமான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்படுவதாகவும் --

இது முறைகேடுகள் நடத்துவதற்கான முஸ்தீபாக இருக்கலாம் என்றும் சுதந்திரக் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

தூதுக்குழுவினர்நேற்று முன்தினம் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்தனர்; அவர்கள் தேர்தல் ஆணையாளரிடம் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு:—

★ கடுவல என்னுமிடத்தில் சுதந்திரக் கட்சி ஆதரவாளரை பொலீஸார் தாக்கினர்.

★ சுதந்திரக்கட்சிக்கு எதிரான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அச்சுவரொட்டிகள் தேர்தல் சட்ட விதிகளுக்கு முரணனவை என்று சட்டமா அதிபர் அறிவித்தும் பொலீஸார் அவற்றை அகற்றவில்லை.

★ கிழக்கு மாகாணத்தில் பிரசாரக் கூட்டங்களை நடத்த இந்தியத் தூதர் டிக்ஸிற்றின் அனுமதி பெறப்படவேண்டும் என்று எமது அமைப்பாளர்களுக்கு அமைதிப்படை கூறியுள்ளது.

—இம் முறைப்பாடுகள் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். (உ-எ)

## செய்திச் சாரம்

### ஓய்வூதியம் அடுத்த வாரத்தில்

யாழ்ப்பாணம் டிச 2

நவம்பர் மாத ஓய்வூதியத்தை அடுத்த வாரத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதிய வழங்களுக்கான ஒரு தொகுதிப் பற்றுச் சீட்டுக்கள் நேற்று முதல் கட்டமாக தபாலில் சேர்க்கப்பட்டன.

ஏனைய பற்றுச் சீட்டுக்கள் அடுத்த சில நாட்களில் தபாலில் சேர்க்கப்படும். (ஓ-9)

### இராஜினுமா ஏற்கப்படவில்லை

கொழும்பு. டிச 2

பதுளை அரச அதிபர் டி. எச். பி. பி. திஸநாயக்காவின் இராஜினமாவை ஏற்பது இல்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

கொலேப்பயமுறுத்தல் காரணமாகவே அவர் ராஜினுமாக் கடிதத்தை சமர்ப்பித்தார்.

ராஜினுமாவை ஏற்பது இல்லை என்றும் அவரை உள்நாட்டமைச்சுக்கு இடமாற்றஞ் செய்வது என்றும் அரசு தீர்மானித்திருப்பதாக தெரிய வருகிறது. (உ-எ)

### பருத்தித்துறை மக்களுக்கு நிவாரணம்

பருத்தித்துறையைச் சேர்ந்த 734 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்தல் நிவரணமான ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

எதிர் வரும் 3ம் 4ம்திகதிகளில் நெல்லியடி மக்கள் வங்கிக் கிளையினூடாக இவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான காசோலைகள் கடந்த மாத முற்பகுதியில் செயலகத்தினுல் வங்கிக்கு அனுப்பிவைக்கப் பட்டிருந்தன. (ஓ-5)

### புழுங்கல் அரிசி இறக்குமதி

கொழும்பு, டிச 2

50 ஆயிரம் மெட்ரிக் தொன் புழுங்கல் அரிசியை உடனடியாக இறக்குமதி செய்வது என்று அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கான அனுமதி தனியார்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

முதல் தொகுதி அரிசி இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன் இறக்குமதியாகும். இறக்குமதியாகும் அரிசி ஒரு கிலோ 10 ரூபா வீதம் விற்கப்படும். (ஓ-எ)

### நகரில் இளைஞர் ரோந்து

யாழ்ப்பாணம், டிச. 2

யாழ் நகர் வீதிகளில் நேற்று இளைஞர்கள் நடை பவனியாகவும் வாகனங்களிலும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டதைக் காணக் கூடியதாகவிருந்தது. (ஓ-51)

### அமைச்சரவை ஆராய்வு

கொழும்பு, டிச 2

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள தமிழ்மொழியை அரசகரும மொழியாக்கும் சட்டம் பற்றி அமைச்சரவை நேற்று முன் தினம் ஆராய்ந்தது

எப்போது சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என்பது குறித்து அமைச்சரவை முடிவு செய்யவில்லை. (உ-எ)

### 24 பிக்குகள் காவலில்

கொழும்பு, டிச. 2

24 பௌத்த பிக்குகள் உட்பட சுமார் 800 பேர் பூஸா தடுப்பு முகாமில் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். அனைவரும் சிங்களவர் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

### வல்வையில் கைதானேர் விடுவிப்பு

வடமராட்சி, டிச. 2

வல்வெட்டித்துறையில் வைத்து கடந்த அக்டோபர் 31ஆம் திகதி அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தவர்களில் 24 பேர் அண்மையில் விடுவிக்கப் பட்டனர்.

வல்வைப் பிரசைகள் குழுவினர்மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்தே இவர்கள் விடுவிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. (ஓ-160)

### விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 2

சைக்கிளில் சென்றவர் மினிவானுடன் விபத்துக்குள்ளாகி மரணமானுர்.

இச்சம்பவம் கிளிநொச்சியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த என். பத்மநாதன் (வயது 26) என்பவரே மரணமானவர். (ஓ-9)

### வர்த்தகர் சுட்டுக்கொலே

யாழ்ப்பாணம், டிச. 2

பளைப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகரான குணம் என்பவர் நேற்று இனந்தெரியாதோரினுல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவரது சடலம் பளை ரயில் நிலேயத்திற்கு அருகில் கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. (ஓ-9)

### உரும்பராயில்

யாழ்ப்பாணம் டிச 2

புதனன்று இரவு உரும்பிராய்ப் பகுதியில் ஒருவர் சுட்டுக் கொல்லப் பட்டார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் உரும்பராய்யோகபுரத்தைச் சேர்ந்த ஏகனகலிங்கம் (வயது40) எனத் தெரியவருகிறது. (உ-9)

### தொடர்ந்து இருளில்

நாட்டின் பல பாகங்கள் தொடர்ந்தும் இருளில் மூழ்கியுள்ளன.

டிரான்ஸ்போமர்கள் திருத்தும் பணியில் ஈடுபட ஊழியர்கள் தயக்கம் காட்டுவதே இதற்குக் காரணமாகும். (ஓ)

## இடதுசாரிக் கட்சியின் ஆட்சியில்தான் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டும்

### ஈரோஸ் பாலகுமாரன் கூறுகிருர்

யாழ்ப்பாணம், டிச. 2

இந்த நாட்டில் முற்போக்குச் சிந்தனை கொண்ட மூன்ருவது இடதுசாரிக் கட்சி ஒன்று பதவிக்கு வருவதன் மூலமாகவே தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியும் என்று நம்புகிறேம்.

ஏற்கனவே பதவியில் இருந்த கட்சிகள் மீண்டும் மீண்டும் ஆட்சிக்கு வருவதால் தமிழர் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை.

ஈரோஸ் இயக்கப் பிரமுகர் திரு பாலகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ்நகர் வந்திருந்த மக்கள் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. வை. பி, டி. சில்வாவை திரு பாலகுமாரன் சந்தித்திருந்தார். அது குறித்து அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

திரு. வை. பி டி சில்வாவும் மேற்படி கருத்தையே என்னிடம் தெரிவித்தார்.

ஆனல் தேர்தல் கூட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## 4 பேர் பலி! 60 பேர் காயம்!!

கொழும்பு டிச 2

ஒஸியைகொல்ல நேற்று எடுக்கப்பட்ட முயற்சியின் போது 4 பொது மக்கள் உயிரிழந்தனர். 60 பேர் படுகாயமடைந்தனர்.

பொதுகூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த மேடையை நோக்கிவந்த துப்பாக்கி மனிதர்கள் முதலில் குண்டை விசினர். பின்னர் அடுத்தடுத்து வேட்டுக்களைத் தீர்த்தனர்.

எனினும் ஒஸி அபேகுணசேகரா காயம் ஏதுமின்றித் தப்பினர். (உ)

## பாக். பிரிகேடியரை வெளியேற உத்தரவு

புதுடில்லி, டிச. 2

உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் புதுடில்லிப்பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் இராணுவ அதிகாரி பிரிகேடியர் ஸாகிர் இஸ்லம் அப்பாஸியை 24 மணித்தியாலத்தில் நாட்டை விட்டு வெளியேறும்படி இந்திய அரசு உத்தரவிட்டது.

இந்த அதிகாரியுடன் ஹோட்டல் அறையில் இருந்த பாகிஸ்தான் தூதரக எழுதுவினைஞர் ஒருவரும் நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிடப்பட்டார். (உ-எ)

(முன்னர் வந்த செய்தி 5ஆம் பக்கத்தில்)

## ஒஸியை கொல்ல மீண்டும் முயற்சி!

கொழும்பு, டிச. 2

ஜனுதிபதித் தேர்தல் வேட்பாளர் ஒஸி அபேகுணசேகராவை கொலே செய்ய மற்ருெரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது

எனினும் அவர் தப்பிப் பிழைத்தார்.

கொழும்பின் வடக்குப் பகுதியில் நேற்று மாலே நடைபெற்ற பொதுக் கூட்டம்ஒன்றில் வைத்து திரு ஒஸி அபே குணசேகராவைச் சுட்டுக் கொல்ல துப்பாக்கி ஏந்திய நபர்கள் முயற்சித்ததாக பொலீஸாரின் தரப்பில் கூறப்பட்டது.

இருவாரங்களுக்குமுன்னர் ஒஸியைக் கொல்வதற்கு எடுக்கப்பட்ட மற்ருெரு முயற்சியில் அவர் தப்பிப் பிழைத்தது தெரிந்ததே. இம்முயற்சியின் போது மூவர் கொல்லப் பட்டனர். (உ)

### முச்சந்தி முரளி



அப்ப அங்காலே இருக்கிறவையள் உப்புச் சப்பில்லாம வாழுகினம் எண்டு சொல்லுங்கோ....

### கொழும்பில் உப்புக்குத் தட்டுப்பாடு

கொழும்பு, டிச. 2

கொழும்பில் உப்புக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது- போக்குவரத்துச் சீரின்மையாலேயே இந்நிலே ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கொழும்பில் உப்பு கிலோ 6ரூபா வரையில் விற்கப்படுகிறது. (ஓ)

### சிப்பாய்கள் ஆயுதங்களுடன் தலேமறைவு

ஹக்மனை எம்.பி திரு யாப்பா அபேரத்னவின் வீட்டில் காவலுக்கு நின்ற தேசியதுணைப் படையைச் சேர்ந்த ஐந்து சிப்பாய்கள் ஆயுதங்களுடன் தலேமறைவாகி விட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

### இருவர் காயம்

யாழ்ப்பாணம் டிச 2

கிளிநொச்சி சேவியர் கடைச்சந்திப் பகுதியில் நேற்று இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கனகபுரத்தைச் சேர்ந்த சு. வசந்தகுமார் [36 வயது] செ. தர்மலிங்கம் [வயது 40] எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-9)

### சுபநேரம்

2 - 12 - 1988
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
6-15 முதல் 7-45வரை
ராகுகாலம்:-
10-45 முதல் 12-15வரை
நவமி இரவு 4-47வரை

### பங்களாதேஷில் சூருவளியின் அனர்த்தம்

டாக்கா, டிச 2

பங்கள தேஷில் சூருவளியின் அனர்த்தத்தால் 600 க்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர் என அறிவிக்கப்படுகிறது.

ஆயிரம் பேர்வரையில் காணவில்லை. மொத்தமாக 5,000 பேர் வரையில் மரணமாகி இருக்கலாம் என ஊர்ஜிதமற்ற தகவல் ஒன்று கூறுகிறது (ஓ)

(முன்னர் வந்த செய்தி 5 ஆம் பக்கத்தில்)

### பதிலடி!

பாக் அதிகாரிகள் இருவரை இந்தியா நாட்டை விட்டு வெளியேற்றிய தற்கு பதிலாக இந்திய அதிகாரிகள் இருவரை நாட்டைவிட்டு பாகிஸ்தான் வெளியேற்றியது.

## பாக். பிரதமர் பெனுஸிர்பூட்டோ

இஸ்லாமபாத், டிச. 2

பாகிஸ்தானின் பிரதமராக 35 வயதான திருமதி பெனுஸிர் பூட்டோ நியமிக்கப்பட்டார். அவர் இன்று பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார்.



பெனுஸிர்

இதனை பதில் ஜனுதிபதி குலாம் இஷாக்கான் நேற்று மாலே நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை ஒன்றில் உத்தியோகபூர்வமாக வெளியிட்டார்.

திருமதி பெனுஸிர் பூட்டோ வயதில் இளையவர் தான், ஆனல் நன்ருகப் படித்தவர். நாட்டு மக்களின் தெரிவும் அவரே. (Choice of nation)

அவசரகாலச் சட்டமும் நீக்கப்படுகிறது. இது புதியபிரதமர் ஜனநாயக சூழ்நிலையில் அரசு அமைத்து செயற்பட உதவும்.

பிரதமர் தெரிவு பற்றி நான் அரசியல் கட்சிகளின் தலேவர்களுடன் ஆலோசித்தேன். இறுதியில் ஸ்திரமான அரசு ஒன்றை மக்கள் கட்சி மட்டுமே அமைக்கக் கூடிய நிலேயில் இருப்பதாக உணர்கிறேன்.

-- இப்படி பதில் ஜனுதிபதி குலாம் இஷாக் கான் தெரிவித்தார்.

முஸ்லிம் நாடு ஒன்றில் பிரதமராகப் பதவி ஏற்கும் முதலாவது முஸ்லிம் பெண் பெனுஸிர் ஆவார். (உ-எ)

## ஜனநாயக ரீதியில் ஈ, பி ஆர். எல். எவ். செயற்படும்

### யாழ்ப்பாணத்தில் பத்மநாபா

வடக்கு,கிழக்குப்பகுதிகளில் ஏற்றத் தாழ்வு அற்ற சமுதாயத்தை அமைக்க ஜனநாயக ரீதியில் ஈ. பி. ஆர், எல்,எவ் பாடுபடும்.

இவ்வாறு அவ்வமைப்பின் செயலாளர் நாயகம் திரு. பத்மநாபா யாழ்ப்பாணத்தில் தம்மைச் சந்தித்த பொது மக்களின் பிரதிநிதிகளிடம் தெரிவித்ததாக இந்திய வானெலி அறிவித்தது.

தமிழர்கள் தமக்குத் தாமே அமைச்சரவை அமைக்கும் இவ் வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அதனைப் பயன்படுத்தி இணைந்து செயற்பட தயாராக வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்ததாகவும் இந்திய வானெலி அறிவித்தது

இதனிடையில் திரு. பத்மநாபாவுடன், முதலமைச்சராக நியமிக்கப் பட்டிருக்கும் திரு ஏ. வரதராஜப்பெருமாளும் வந்திருந்ததாக யாழ்ப்பாணப்பிரமுகர்கள் தெரிவித்தனர். (உ)

## இந்திரா கொலே வழக்கு; தூக்கு ஒத்திவைப்பு

புதுடில்லி, டிச- 2

இந்திரா காந்தியைக் கொலே செய்தவர்களான சத்வன்சிங், கேஹர்சிங் ஆகியோருக்கு இன்று நிறைவேற்றப்படவிருந்த மரண தண்டனையை புதுடில்லி உயர்நீதிமன்றம் ஒத்திவைத்தது.

இது தொடர்பாக நேற்று இறுதி நேரத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை ஏற்றுக் கொண்ட டில்லி உயர் நீதி மன்றம், அவை மீதான விசாரணை எதிர் வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்றும் அறிவித்தது.

இதற்கிடையில் மரண தண்டனை நிறைவேற்றுவதை ஒத்திவைக்கும் படி கோரி நேற்றுக்காலே தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை புதுடில்லி மேல் நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

அதைத் தொடர்ந்தே

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டுமாதங்கள் நிரம்பிய ஆண் பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- கிறிஸ்ரி 261/10 கொழும்புத்துறை வீதி. (சணக்கர் சந்திக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கை) கொழும்புத்துறை (8021)

## நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/357)

## கோழிக்குஞ்சு விற்பனை

Hisex, Golden comet பிறவுண் சேவற் குஞ்சுகள் பேட்டுக்குஞ்சுகள், புரொயிலர் குஞ்சுகள், கறுப்பு சேவற் குஞ்சுகள், Hyl ne வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் வெள்ளிக்கிழமை 2 12-88 இல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் (8003)

நன்கு பராமரிக்கப்பட்ட 2 மாத வயதுடைய பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் ஒரு மாத வெள்ளை கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் தொகையாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 23, கடற்கரை வீதி. ஈச்சமோட்டை. (8007)

## தேவை

பிராமணகுல டாக்டர் பையனுக்கு அதே குலத்து மணமகள் தேவை. அழகும் நிறமும் கல்வித் தகைமையும் உடையவராக இருக்கல் வேண்டும். மணமகன் தாரமிழந்தவர் இருகுழந்தைகள் உண்டு வயது 35 செவ்வாய்தோஷம் உண்டு. புகைப்படம், சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. K வைத்தீஸ்வரக் குருக்கள் வில்லூன்றிப் பிள்ளையார் கோவில், கொட்டடி. (7771)

## வேலை தேவை

ஆங்கிலத்தில் சுருக்கெழுத்து தட்டெழுத்து கணக்கியல் மற்றும் ஆங்கில மொழி ஆகியவை படிப்பிக்கக்கூடிய ஒருவருக்கு வேலை தேவை. 394, C/O உதயன், யாழ்ப்பாணம். (8017)

## A/L 89 இரசாயனம்

108 Brown Road A/L 89 பௌதிக இரசாயனம் "சமநிலை" ஆரம்பம் (3-12-1988) சனி 3 15 P M (சனி, ஞாயிறு 3 15-4 15 P M) 4 15-6 00 P.M (இரசாயனம் பிணைப்பு சேதன இரசயனம்) ஆசிரியர்: சத்தீஸ். (8016)

## புதிய வகுப்புக்கள்

1989ஆம் கல்வி ஆண்டிற்கான புதிய வகுப்புக்கள் ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்பட வுள்ளன. ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை/ அனுமதிப்பரீட்சைக்கான வகுப்பும் நடைபெறும் ஆரம்பம்:- 05 12 88 திங்கள் பி ப 3.00 மணி மேலதிக விபரங்கட்கு: நிர்வாகி, புதிய கல்வி நிலையம் (கெங்காதரன், ஆஸ்பத்திரி முன் பாக யாழ்ப்பாணம். (8020)

## ஆங்கில வகுப்பு

சாவகச்சேரியில் O/L ஆங்கிலம் 88. மீட்டல் பயிற்சிகள் திரு. திருமதி ஷண் ஆசிரியர்களால் புதிய பழைய பாடத்திட்டத்திற்கமைய ஆரம்பம்: 5 12-88 காலை 9 மணி திங்கள், புதன். வெள்ளி மாதம் 25/- சுஷாந்தினி இன்ஸ்ரியூட்ஸ், 23 டச்சு றோட், சாவகச்சேரி. (8013)

## சோதிட திருமண சேவை

வைரவிழா கண்ட ஜாதகத்தைக் கொண்டு உங்கள் எதிர்காலத்தைச் சிறப்பியுங்கள் கிறிஸ்தவ, இந்து சமய மணமகன், மணமகள் உடன் தேவையானவர்கள் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்;- கைரேகை, எண் சோதிட நிபுணர் செ நாகேந்திரா, கிறிஸ்தவ திருமண அமைப்பாளர் வின்ரோ - மகேந்திரா, 6, நவீன சந்தை மேல் மாடி மக்கள் வங்கிக்கு அருகாமை, யாழ்ப்பாணம். (8012

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பாவிப்பதற்கு மூன்று அவதை (Three-Phase) மின்சார ஜெனரேட்டர்கள் வாடகைக்கு தேவைப்படுகின்றன.

இவற்றை வைத்திருப்போர் 6/12/88 க்கு முன்னதாக பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளருடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்

-பதில் பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
C/464

# வேகமாக விற்பனையாகின்றன!

## ENGLISH TEACHERS EXAMINATION

உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி

அஸ்ரன் வெளியீடு:

விலை ரூபா 47. 50

1982, 83, 84, 87இல் நடைபெற்ற பரீட்சைகளின் மாதிரி வினாவிடைகளையும் உள்ளடக்கியது.

கிடைக்குமிடங்கள்:-

பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்.
ஸ்ரீ லங்கா புத்தகசாலை - யாழ்.
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை - யாழ்.
(C/840)

## மண்டைதீவில் பாணுக்குத் தட்டுப்பாடு

மண்டைதீவு டிச 02 மண்டைதீவுப் பகுதியில் பாணுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இப்பகுதியிலுள்ள பேக்சரி கடந்த சில மாதங்களாக மூடப்பட்டுள்ளதை தொடர்ந்தே பாணுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வெளியிடங்களிலிருந்து இங்கு கொண்டுவந்து விநியோகிக்கப்படும் பாண் இப்பகுதி பாவனையாளருக்கு முழுமையாகப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது (ஒ-ச-88)

## A/L 89 Batch ஆரம்பம்:- 3- 12- 1988.

புலங்கள் Sat Sun - 3. 30 - 5 00 p . m

ஆசிரியர்:- Mr. ரவிந்திரநாதன் B Sc (Hons)
3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (C/463)

# உடனடி வேலைவாய்ப்பு

## சவூதி அரேபியா

## S. O. M. C

பல்கலைக்கழகம் } இவ்விரண்டிலும் வேலைவாய்ப்பிற்கு உடனடி ஆள் தேவை.
ஆஸ்பத்திரி }

| | | | | சம்பளம் |
|---|---|---|---|---|
| 1. | சுத்திகரிப்பாளர் (Cleaners) | — | 400 பேர் | 400 SR |
| 2. | கனரக வாகனச் சாரதிகள் (Heavy Vehicle Drivers) | — | 15 பேர் | 750 SR |
| 3. | சாதாரண வாகனச் சாரதிகள் (Light Vehicle Drivers) | — | 40 பேர் | 600 SR |
| 4. | Heavy Equipment Operators (Cutterpiller, Buldozer Operators) | — | 16 பேர் | 750 SR |
| 5 | மோட்டார் வாகனங்கள் பழுதுபார்ப்பவர்கள் (Auto Mechanic) | — | 10 பேர் | 800 SR |
| 6 | மோட்டார் வாகன வயரிங் செய்பவர்கள் (Car Electrician) | — | 5 பேர் | 800 SR |
| 7. | Leadman (Plumbing, Mechanic, Electric Wiring) (குழாய் பொருத்துனர், மெக்கானிக், மின்சார வயறில் இவைகளில் கொஞ்சம் தெரிந்தவர்களாக இருத்தல் வேண்டும்) | — | 10 பேர் | 500 SR |
| 8. | Plumber (குழாய் பொருத்துனர்) | — | 10 பேர் | 650 SR |
| 9. | Boiler Technician | | | 1000 SR |
| 10. | Electrician | — | 10 பேர் | 650 SR |
| 11. | சுத்திகரிப்பாளர் (பெண்கள்) Cleaners (Hospital) | — | 50 பேர் | 400 SR |

வயதெல்லை பெண்களுக்கு 30—45 வரை
ஆண்களுக்கு வயதெல்லை 21—48 வரை
கடவுச்சீட்டு தந்து ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்.

12 Labourers — 100 USD
(தொழிலாளர்கள்) லெபனன் நாட்டிற்குத் தேவை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

13. வீட்டுப் பணிப்பெண் (House Maids) — 100 USD

சகல நண்பர்கட்கும் அறியத்தருவது இவ்வருடத்தில் குறைந்தது 1000 பேருக்கு மேல் சவூதி அரேபியா, குவைத். ஓமான் போன்ற நாடுகளுக்கு அனுப்பிய ஓரேயொரு ஸ்தாபனம்

## T. V. TRAVELS

அன்றும் இன்றும் நம்பிக்கை நாணயத்துடன் பிரயாண ஒழுங்குகளைச் செய்து தருபவர்கள்

## T. V. TRAVELS

**Brown Road, Kokuvil**

இவ்வருடத்தில் கடைசியாக அரிய சந்தர்ப்பம் இந்தக் கம்பனி S O. M C. ஒன்று தான். ஒவ்வொரு மாதமும் தவறாது ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கும் கம்பனி இதுவேதான்.

● முக்கிய குறிப்பு:-

## S. O. M. C.

இக்கம்பனியில் சகல தொழிலாளர்களும் இலங்கையர்கள். கடந்த எட்டு வருடமாக 5000 பேருக்கு மேல் தொழில் பார்க்கின்றார்கள். சகல துறைகளிலும் அதில் குறைந்தது மூவாயிரம் பேர் அளவில் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த தமிழர்கள். கூடிய பாகம் இக்கம்பனியில் தமிழர்களுக்கு தனிமதிப்புண்டு என்பதை உங்களுக்கு விளங்கத் தருகின்றோம் மூன்று வருடம் தொடர்ந்து எதுவிதமான பிரச்சினையுமின்றி வேலை செய்தால் திரும்பவும் அக்கம்பனியில் இலங்கை வந்து திரும்பப் போவதற்கு அக்கம்பனி சகல ஒழுங்கும் செய்து தரும்.

# T.V. TRAVELS & TOURIST

BROWN ROAD,
KOKUVIL. (C/846)

# LONDON EXAMS

MAY - JUNE 1989

C.I.M.A. I.A.B.
I.D.P.M. A.A.T.

(சனி, ஞாயிறு வகுப்புகள்)

## ஆரம்பம்: 03 - 12 - 1988

போதனையில் சாதனை புரியும் முன்னணி விரிவுரையாளர்களின் தன்னிகரற்ற சேவை

| | |
|---|---|
| யூயின் மரியாம்பிள்ளை | சத்தியமூர்த்தி |
| மனோரட்ணம் | சூரியரட்ணம் |
| கதிர்காமநாதன் | பத்மநாதன் |
| சிறீதரன் | சிவபாலன் |
| ராசநாயகம் | கோபஸ் |

முக்கிய கவனிப்பு:

லண்டன் I A B I A.A. பரீட்சைகளுக்கு 15 ஆண்டுகளுக்கு மேலாக கணக்கியல் விரிவுரைகள் செய்து தனக்கென்றோர் ஒரு தனி இடத்தைப் பெற்றவரும் எமது நிறுவனத்தில் ஆரம்பகாலத்தில் C.A I C M A, I A A I A B வகுப்புகளுக்கு கணக்கியலில் விரிவுரைகள் நடத்தி அனுபவமுள்ளவருமான ஆசிரியர் திரு K C சத்தியமூர்த்தி அவர்கள் மீண்டும் எமது நிறுவனத்தில் பணியாற்றுகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

கணக்கியல் கொம்பியூட்டர் துறைகளில் தன்னிகரில்லாத் தனித்துவம் வாய்ந்த ஒரே கல்வி நிறுவனம்

# HARVARD INSTITUTE

SUCCESSORS OF

# CANTABIA INSTITUTE

(SISTER ORGANISATION OF OXONIA, COLOMBO)
No. 21, MAIN STREET, JAFFNA.
(C 845)

# BECON

156/3 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## கலை, வர்த்தகம்

## A/L 89

## DAY CLASSES

(முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும்)

| | |
|---|---|
| பொருளியல்:- | வரதராஜன் |
| அளவையியல்:- | S. S மனோகரன் |
| வர்த்தகம்:- | ரட்ணம் |
| கணக்கியல்:- | மரியதாஸ் |
| தமிழ்:- | தாஸ் |
| இந்துநாகரிகம்:- | ஜோதீஸ்வரன் |

ஆரம்பம்:- 05 12 - 1988
திங்கள் 7. 00 A: M

## A/L 90 பிரிவு 4

சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம்:- 4- 12- 1988
ஞாயிறு 8. 00 A. M
(C847)

## வலம்புரிச்சங்கு விற்பனைக்கு

தேவர்கள் அமிர்தம் கடைந்த போது பாற்கடலில் வெளி வந்த அமிர்தம் மகாலக்ஷ்மி, அஷ்டவசுக்கள் இவற்றுடன் வெளி வந்த சங்கு பூசைக்கு மிக வேண்டிய சாதனமாகும் வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்து ஆராதிப்பதால் சர்வ சௌபாக்கியங்களும் பெருகி சுபீட்சம் தாண்டவமாடும்.

மூன்று சங்குகள் மட்டும் உண்டு. விலை 900/-
கோவில் தேவைக்குரிய அளவில் ஒன்று 1300/-
தொடர்பு:
திரு T. உருத்திரகோடீஸ்வரக்குருக்கள்,
பிள்ளையார் கோவில் வடக்கு வீதி,
சொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
(8153)

## International Student Programme

## Study in Australia

**Nursing as a Career:**
Earn a professional degree / diploma in nursing.
**1989 Intake is now on!**
**Hurry meet us immediately!!**

Also students can enroll for other professional degree courses as well leading to job opportunities in Australia

**Programmes available are:-**

Diploma in Management, Accounting, Marketing Graduate Diploma in Education Teaching Medical Radiation Technology, Nursing, Occupational Health & Safety, Social Health & Welfare, Visual Arts, Graphic Communication, Mass Communication.

Walk - in interviews on Sunday.

4th December 1988

**Requirements:**

(1) Very good proficiency in English essential. TOFEL/ELTS score an advantage.
(2) Valid Passport with 'All Countries' endorsement +2 sets of photo-copies of pages 2,3,4, &5
(3) O L Certificates - Originals (+2 sets of photo-copies) A/L Certificates - Original (+2 sets of photo-copies)
(4) 4 Photos Passport size
(5) Selected candidates should arrange for a Bank Draft for AUS$ 100/ payable to (a Edwards College, Perth OR (b) Hunter Institute of Higher Education, New South Wales.

**INAEPIDO**
Industrial & Management Consultants
35, Kankesanturai Road, Mallakam.
(8154)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

J.M.J

உங்கள் பயண அமைப்பாளர்

# எஸ்.பி.அன்ரன் வழங்கும்
# வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

## மத்திய கிழக்கில் உடனடி வேலைவாய்ப்பு ஒழுங்குகள்

**JORDAN - யோர்தான்**

யோர்தான் அரசாங்கத்தினால் பரிபாலிக்கப்படும் விமான நிலையம், வைத்தியசாலை, பாடசாலை ஆகியவற்றில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாகச் செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| Cleaners | U. S 450 |
| General Helpers | U. S 450 |

வயதெல்லை: 18—35

**சவூதி அரேபியா**

சவூதி அரேபியா அரசுக்குச் சொந்தமான பாரிய மீன்பிடிக் கப்பல்களில பணிபுரிவதற்குக் கீழ்க்காணும் பதவிவெற்றிடங்கள் உடனடியாக உள்ளன.

| | சம்பளம் | | |
|---|---|---|---|
| Captain / Master - | 1500 S.R | 12.000/- | ரூபா |
| III rd Engineer | 1200 S.R | 10,000/- | ரூபா |
| மீன்பிடித் தொழிலாளர்கள் | 900 S.R | 7, 200/- | ரூபா |

உணவு இருப்பிட வசதிகள் இலவசம்

விரும்பும் கடற்றொழிலில் போதிய அனுபவம் உடையவர்கள் மட்டும் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Saudi Visa**

1. Mr. Marian Vincent Sutharasingh
   கரையூர் - H 0376706
2. Mr. Sebamalai Mariyan Thevathasan
   ஊர்காவற்றுறை - J 0260845
3. Mr. Emmanuel Francis Justin
   ஊர்காவற்றுறை - H 0306598
4. Mr. Manuel Dadycilus alias Douglus Selvakumar
   - H 0292192

மேலே குறிப்பிட்ட பெயர் உடையவர்களுக்கான பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

விசா மற்றும் ஒழுங்குகள் மிகத் துரிதமாகச் செய்து தரப்படும், மேலதிக விபரங்களுக்கு உடனே நேரில் வருக.

உங்கள் பயண அமைப்பாளர்,

## எஸ்.பி. அன்ரன்

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம். (C/800)

**வீதி சீரமைப்பு**

புளியங்கூடல் சந்தியிலிருந்து சரவணைச் சந்திவரையிலுள்ள வீதி தற்போது சீரமைக்கப்பட்டு வருகின்றது.

பல காலமாக குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இவ்வீதி திருத்தப்படுவதை அடுத்து இப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (ஓ-16)

35க்கும் மேற்பட்ட தொழிலாளர்

## தொழில் செய்ய அனுமதி கிடைக்காததால் பாதிப்பு

குருநகர், டிச.02

"யாழ்-பண்ணை வீதிக்குக்கிழக்குப் பக்கம் உள்ள இடைக்களம், ராசாங்களம் ஆகியவற்றை அண்டியபகுதிகளில் தொழில் செய்துவந்த 35க்கும் மேற்பட்ட இறால் பிடிக்தொழிலாளர்கள் கடந்த ஜூலை மாதத்திலிருந்து நன்கு மாதங்களாக மேற்படி பகுதியில் தொழில்செய்ய அனுமதி கிடைக்காமல் பாதிக்கப்பட்டுக் கஷ்டமுறுகின்றனர்.

குருநகர் சிறுகவலை கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திற்கு பாதிக்கப்பட்ட 35 தொழிலாளர் ஒரு மகஜர்ஒன்றை அனுபபி வைத்துள்ளனர்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுளளதாவது –

எமது விசயத்தில் சங்கம் இன்னமும் எந்தவித முன்னேற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் இருந்து வருகிறது. இது கவலை தருவதாகும்,

ஒருமாதத்தில் பெற்றுக தருவதாகத் தெரிவித்த மேற்படி விடயம் நான்கு மாதங்களாகியும் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. (ஓ-51)

## குடிகாரக் கணவனுக்கு புதுமையான தண்டனை!

கொழும்பு, டிசம்பர் 30

மதபோதையில் தினமும் மனைவியைத் தாக்கி வந்த ஒரு கணவனுக்கு மாத்தறை பகுதியில் இளைஞர்கள் புதுமையான தண்டனையை வழங்கினர்.

மாத்தறையில் கெக்கனபுர என்ற இடத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றிய விவரம் வருமாறு;

கணவர் தினந்தோறும் மது அருந்திய பின்னர் வீடு திரும்பி மனைவியை நன்றாகத்தாக்கி வருவது வழக்கம். அப்பகுதி இளைஞர்களுக்கு இவ்விஷயம் தெரியவந்தது

கணவரை அழைத்துச்சென்று விசாரித்தனர் பின்னர் புதுமையான தண்டனை ஒன்றை வழங்கினர்.

தண்டனை இதுதான்!

கணவன் மனைவியை ஒரு நாள் முழுவதும் குழந்தையைத்தூக்கி வைத்திருப்பது போல் தூக்கி வைத்திருக்க வேண்டும்; அதுவும் நகரின் பகிரங்க சந்தி ஒன்றில் தூக்கியபடி நிற்க வேண்டும்.

என்ன செய்வது! இளைஞர்கள் விதித்த தண்டனை அல்லவா? ஒன்றுமே செய்ய முடியவில்லை.

மனைவியைத் தூக்கியபடி நடுச்சந்தியில் ஒருநாள் முழுவதும் நின்றார் கணவர்.

குடும்பச் சுமையை சரியாகச் சுமக்க முடியாதவர் மனைவியைச் சுமக்க வேண்டியதாயிற்று!

மனைவி பாரம் கூடியவராக இருந்ததால் கைகளில் தூக்கியபடி நிற்கமுடியாத நிலையில் சிலமணித்தியாலங்கள், தோளிலும் மாறி மாறிச் சுமந்தபடி நின்றார் கணவன். (உ-எ)

யாழ் பல்கலைக்கழகத்தில்

## மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு ரூ.500ஆக அதிகரிப்பு

யாழ்ப்பாணம் டிச 02

யாழ் பல்கலைக்கழகத்தில் மகாபொல புலமைப் பரிசில் பெறும் மாணவர்களின் மாதாந்தக் கொடுப்பனவு 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

முன்னர் இவர்களுக்கு மாதாந்தம் 350 ரூபா வழங்கப்பட்டு வந்தது.

கடந்த செப்டம்பர் மாதம் முதல் இவர்களுக்கு 500 ரூபா மாதாந்த கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருகிறது.

நிப்பொன் மகாபொல நிதியத்துக்கு மானிய உதவி வழங்கியிருப்பதை அடுத்தே இந்த அதிகரித்த கொடுப்பனவு தற்போது வழங்கப்பட்டு வருகிறது

நாட்டில் தற்போது யாழ் பல்கலைக்கழகம் மாத்திரமே இயங்கி வருவதால் யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மாத்திரமே இப்போது மாகபொல புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் இந்த மாதாந்தக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறதென்பது குறிப்பிடத்தக்கது. (இ-ஐ)

## விஷ்ணு டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

கலை, வர்த்தக

# 89 மீட்டல் DAY CLASSES

ஆரம்பம்: 05.12.1988 (காலை 8.00)

90 பிரிவு - 3 ஆரம்பமாகிவிட்டன.
[சனி, ஞாயிறு காலை 8. 00]

முக்கிய குறிப்பு:

I எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஒருங்கிணைந்து நடாத்தும் ஒரே நிறுவனம்.

II வாரத்தில் ஐந்து நாட்களும் சகல பாடங்களும் நடைபெறும்.

III மாணவர்கள் முன்கூட்டியே அனுமதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்

IV மாணவர்களுக்கு விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

(C/823)

ஊர்காவற்றுறை பிரதேச சபை,
ஊர்காவற்றுறை.

## வழங்குனர்களைப் பதிவு செய்தல்—1989

கீழ்க் காணும் விடயங்களுக்கு ஊர்காவற்றுறை பிரதேச சபையோடு தங்களைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் வியாபார ஸ்தாபனங்கள்/உற்பத்தியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களைப் பதிவுத் தபால் மூலம் விசேட ஆணையாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை ஊர்காவற்றுறை என்ற விலாசத்திற்கு 15-12-88க்கு முன்னர் அனுப்பி வைக்கலாம்.

அந்தந்த விடயங்களுக்கு நேரே குறிப்பிடப் பட்டுள்ள பதிவுக் கட்டணத் தொகையை காசோலை/தபாற்கட்டளை மூலம் விண்ணப்பத்தோடு செலுத்தலாம்.

| | | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| 1. | மின் பொருட்கள் வழங்கல் | —ரூபா. 50 00 |
| 2. | வலுவூட்டப்பட்ட மின்கம்பங்கள் வழங்கல் | —ரூபா. 50.00 |
| 3. | காகிதாதிகள்/அச்சிட்டபடிவங்கள் | —ரூபா. 50.00 |
| 4 | சுகாதாரப் பொருட்கள் | —ரூபா. 50.00 |
| 5. | சோலவுடை துணிகள் | —ரூபா. 50.00 |
| 6. | பாதணிகள் | —ரூபா. 25.00 |
| 7. | தண்ணீர் திட்டத்துக்குரிய பொருட்கள் | —ரூபா. 50.00 |

ச. சா. சிவாத்தினம்
விசேட ஆணையாளர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை

(C/457)

ஊர்காவற்றுறை பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல் - 1989

கீழே குறிப்பிடப்படும் சந்தைகளுக்கு/இறைச்சிக் கடைகளுக்கு 31 12-89 ஆம் திகதிவரைக்கும் சந்தைக் கடைகள் தொடர்ச்சியாக வாடகைக்கு விடுவதற்கும் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் டிசம்பர் 15 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை அதற்கான கட்டணங்களைச் செலுத்தி டிசம்பர் 14 ஆம் திகதி நண்பகல் வரை அந்தந்த உப-அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட மூலப்பிரதி யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கும் எனக்கும் (ஆணைப்பிரதி) அனுப்பிவைக்கப்படவேண்டும். மேலதிக விபரங்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

| வியாபாரம் | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்பு | கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|---|
| 1. மாட்டிறைச்சிக் கடை ஊர்காவற்றுறை | 1 | 3661.00 | 100.00 | 25.00 |
| 2. மாட்டிறைச்சிக் கடை ஊர்காவற்றுறை | 2 | 3256.00 | 100.00 | 25.00 |
| 3. மேல்மாடிக் கடை ஊர்காவற்றுறை | 1-8 | 12000.00 | 250.00 | 25.00 |
| 4. பழைய சந்தைக் கடை | 1 | 4500.00 | 100.00 | 25 00 |
| | 2 | 6000.00 | 100 00 | 25.00 |
| | 3 | 1200.00 | 100 00 | 25 00 |
| | 4 | 1200.00 | 100 00 | 25 00 |
| | 5 | 1680.00 | 100 00 | 25 00 |
| | 6 | 1440.00 | 100.00 | 25 00 |
| | 7 | 5400.00 | 100.00 | 25 00 |
| | 8 | 2000.00 | 100 00 | 25.00 |
| | 9 | 6000.00 | 100 00 | 25 00 |
| | 10 | 3000.00 | 100.00 | 25 00 |
| 5. ஊர்காவற்றுறை மீன் பரக்கறி சந்தை | | 47000 00 | 250.00 | 25.00 |
| 6. நாரந்தனை புளியங்கூடல் சந்தை | | 3250.00 | 100.00 | 25 00 |
| 7. காரை.வடக்கு நாவலடிக்கேணி மீன்சந்தை | | 5000.00 | 100.00 | 25.00 |
| 8. சேவை:- ஒற்றை மாட்டுவண்டிலுக்கு மாடு வழங்கல் | | | 100.00 | 25 00 |
| 9. சேர் ஒழிப்புத் திட்டக்காணியிலுள்ள பனைமரப் பிரயோசனம் | | | 100.00 | 25.00 |

ச. சா. சிவாத்தினம்
விசேட ஆணையாளர்
ஊர்காவற்றுறை பிரதேச சபை. (C/456)

கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்.

பாடசாலையைவிட்டு விலகியோருக்கான நடாத்தப்படும் முறைசாராக் கல்விப் பிரிவுகளில் பயில்வோருக்கான

## விண்ணப்பம்

விசேடமாக சமீபத்திய அசம்பாவிதங்களினால் பாதிப்புற்று வெளிநாடு சென்று மீண்டோருக்கும், இடம் பெயர்ந்தோருக்கும், ஏனையோருக்குமான தொழிற்திறன் அபிவிருத்திப் பயிற்சிகள் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணைப்படி 15-12-88இல் ஆரம்பிக்கப்படவுள்ளன. தகுதியான விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், விலாசம், வயது, பால், கல்வித் தகைமை, பயிற்சி பெற விரும்பும் பாடநெறி, கல்விகற்ற பாடசாலை ஆகியவற்றைக் கொண்ட விண்ணப்ப படிவத்தைத் தயாரித்து அவ்வப் பாடசாலை அதிபர்களுக்கு 88-12-10ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| | பயிற்சியளிக்கவுள்ள பாடசாலை | பாடநெறி | காலம் |
|---|---|---|---|
| 1. | கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | வானொலி, தொலைக்காட்சி திருத்துதல் | 8 மாதம் |
| 2. | புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி | பனையோலைப் பொருளுற்பத்தி | 4 மாதம் |
| 3. | பாஷையூர் சென் அன்ரனிஸ் றோ. க. பெ பாடசாலை | கடற்படகு எந்திரங்கள் திருத்துதல் | 8 மாதம் |
| 4. | யாழ். மத்திய கல்லூரி | 1. குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டல், எந்திரங்கள் திருத்துதல் 2. கைப்பணிப் பொருளுற்பத்தி | 8 மாதம் |
| 5. | சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம் | மின்சாரவேலை | 8 மாதம் |
| 6. | யாழ்ரன் கல்லூரி (ஆங்கிலமூலம்) | படவரைஞர், கட்டிடகானியங்கள் | 6 மாதம் |

தகைமைகள்:

1. படவரைஞர், கட்டிடகானியங்கள்: க. பொ. த. சித்தி கணிதம், விஞ்ஞானம் ஆங்கிலம் உட்பட சித்தி
2. வானொலி, தொலைக்காட்சி திருத்துதல்: க. பொ. த. சாதாரணதர வகுப்பில் பௌதீகவியல், கணிதம் சித்தி
3. பனையோலை பொருளுற்பத்தி:- 5 ஆம் வகுப்பு சித்தி
4. கடற்படகு எந்திரங்கள் திருத்துதல்:- 8ஆம் வகுப்பு சித்தி
5. குளிர்சாதனப் பெட்டி குளிரூட்டல் எந்திரம் திருத்துதல்:- 8 ஆம் வகுப்பு சித்தி
6. வீட்டு மின்னிணைப்பு:- 8ஆம் வகுப்பு சித்தி

விண்ணப்பதாரிகள் ஏதாவது ஒரு பயிற்சியை மட்டும் கற்க அனுமதிக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின் போது தமது தகைமைகளை நிரூபிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.

88-11-30 (C/459)

கு. சோமசுந்தரம்
கல்விப் பணிப்பாளருக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# London Exams

C.I.M.A. I.D.P.M.
A.A.T. I.A.B.

Computer - Basic
Hotel Management
Pitmans - Book keeping

ஆரம்பம்: 3-12-88 முதல்

ARULLANANDA
BERTRAM
JAYARATNAM
KAILASAPILLAI
NAVARENDRAN
PUSHPA
SIVAPATHASUNDARAM
THAVARATNASINGAM
VIVEKANADARAJAH

JOIN THE LEADERS

கட்டணத்தைப் பகுதி பகுதியாகச் செலுத்த

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
O.LR. (தபாலகத்திற்கு முன்பக்கம்)
16, 3ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(C 814)


University of Jaffna - Sri Lanka

## VACANCY

Applications will be received by me for the Post of Registrar from the suitable candidates upto 1988-12 30.

Application forms and particulars for the above post may be obtained from the office of the Senior Assistant Registrar/Establishments of this University.

Request for Application forms and particulars by mail should be accompanied by a self-addressed stamped envelope of 23 x 10 c. m. size.

Selected candidates will be placed on a suitable point on the scale considering this special qualifications and/or experience.

**Vice-Chancellor**

University of Jaffna, Sri Lanka,
Thirunelvely,
Jaffna
22nd November, 1988.

(C-452)

## நன்றி நவிலலும், அந்தியேட்டி அழைப்பும்



அமரர் க. சிவானந்தசுந்தரம்.

21-10-1988 அன்று அகால மரணமடைந்த எமது தந்தையாரின் மரணச்சடங்கிலும், அவரது இறுதிக் கிரியைகளிலும் பங்களித்து உதவிகள் புரிந்த அனைவருக்கும், மற்றும் மரணச் சடங்கு சிறப்புற நடந்தேற ஒத்துழைப்பு அளித்து, எமது துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் நல்கிய உறவினர்கள், நண்பர்கள், மற்றும் சகல அமைப்புக்களைச் சார்ந்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (4 12-1988) அன்று பருத்தித்துறை முருகன் ஆலயத்தில் காலை 6 மணிக்கு நடைபெறும் அவரது ஆத்ம சாந்திக் கிரியை, பிரார்த்தனைகளிலும் பின் அவரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர் நண்பர்கள், மற்றும் சகல அமைப்புக்களைச் சார்ந்த அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

கந்த உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை,

(7767)

# நாட்டின் சுபீட்சத்துக்கு கல்வித்தர உயர்வு தேவை

பருத்தித்துறை டிச 2

'சமுதாயம் விழிப்புணர்ச்சி பெற்று நாடு சுபீட்சமடைய மக்களின் கல்வித்தரம் உயர்வடைய வேண்டியது முக்கியமாகும்

விஞ்ஞான நாகரிக மாற்றங்களுக்கேற்ப மக்களின் கல்வி நடவடிக்கைகளும் விரிவுபடுத்தப்படவேண்டும். கிராமங்கள் தோறும் கல்விமான்கள், சமூகசேவையாளர்கள், அறிவியலாளர்கள், சாதனையாளர்கள் உருவாக வேண்டும்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள புலோலி கிழக்கைச் சேர்ந்த மூன்று மாணவர்களைப் பாராட்டி புலோலி கிழக்கு மத்திய சனசமூக நிலையத்தால் நடாத்தப்பட்ட பாராட்டு விழாவில் உரையாற்றும் பொழுது புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் திரு. எஸ். கணேசமூர்த்தி குறிப்பிட்டார்.

இவ் விழாவிலே செல்வன் ரீ குணநேசன், செல்வன் எம் லோகநாதம், செல்வன் ஜெவிக்கிரமசேகரன் ஆகியோரே பாராட்டப்பட்டவர்களாவர்.

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவுக்கு சனசமூக நிலையத் தலைவர் திரு. சிறில் கில்பேட் தலைமை வகித்தார்.

(ச-118)

# மாங்குளத்தில் பாதுகாப்புத் தீவிரம்

மாங்குளம் டிச 2

மாங்குளத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரமடைந்துள்ளன. மாங்குளம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை யுனிட் அலுவலகத்திலும் பாதுகாப்புக் கருதி இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர்.

மற்றும் தீவிர ரோந்துகள் நடைபெற்று வருகின்றன. மாங்குளத்தில் திடீர் திடீரென பதற்ற நிலை ஏற்படுகிறது. உடன் மீண்டும் வழமை நிலை திரும்புகிறது இங்கு சமன் டியெல். எவ் அலுவலகமும், ரெலோ அலுவலகமும் திறக்கப்பட்டுள்ளன.

தணுக்காய் வீதி முகாமின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வீதியால் செல்பவர்கள் சென்றியைத் தாண்டும்வரை நடந்தே செல்ல வேண்டியுள்ளது

கடந்த 21ஆம் திகதி புளிமச்சி, நாதிகுளம் அம்பகாமம் வீதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது போராளிகள் தாக்கியதில் மூவர் இறந்தனர். இம்மூவரது சடலங்களும் தணுக்காய் வீதி முகாமில தகனம் செய்யப்பட்டன.

மேலும் கடந்த 18ஆம் திகதி மாங்குளத்தில் இனந்தெரியாதவர்களால் மூன்று இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பணிக்கன் குளம் முகாமில் சோதனைகள் ஓரளவு குறைவடைந்து வருகின்றன.

கொக்காவில் முகாமில் சோதனையிடும் இராணுவத்தினர் வயோதிபர்களையும், பெண்களையும் நடக்காது பஸ்ஸில இருக்க அனுமதிக்கின்றனர்

முறிகண்டிச் சோதனைச் சாவடியில் சோதனைகள் குறைந்துள்ளன.

(இ 94)

## கட்டுப்பாடு தளர்வால் மீன் பிடித்தல் அதிகரிப்பு

வடமராட்சி, டிச 2

வடமராட்சிப் பகுதியில் மீன் பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதை அடுத்து மீனவர்கள் தீவிர நாட்டம் காட்டி வருகின்றனர்

தற்பொழுது அதிகாலை 3மணியில் இருந்து மீனவர்கள் கடலில் மீன் பிடிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது

இதனைக் கொண்டு மீனவர்கள் மிக உற்சாகத்துடன் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

பெருமளவில் நல்லரக மீன்களும் பிடிபட்டுவருகிறது.

(ஒ ச 160)

## ரத்துச் செய்யும் சட்ட மூலம்

கொழும்பு டிச 2

வர்த்தக நிறுவனங்களைச் சுவீகரிக்கும் சட்டத்தை ரத்துச் செய்யும் சட்ட மூலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் 49 பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 50 எம்பிக்களும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டன

எதிர்த்து வாக்களித்தவர் சுலவான எம்பியான டி.யூ குணசேகரா மட்டுமே (இ எ)

## சுகாதாரசேவைக் கைநூல்

மானிப்பாய் டிச. 2

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி ஏ.கிருஷ்ணராசா சுகாதாரசேவைக் கைநூல் ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார்.

ஆரம்ப சுகாதார சேவையாளர்களுக்கு பயனளிக்கும் விதத்தில் உள்ள இந்நூலை யாழ்ப்பாணம் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் வெளியிட்டுள்ளது (இ-90)

## காட்டுப்புலத்தில் மக்கள் கடை

சுழிபுரம், டிச. 2

சுழிபுரம் காட்டுப்புலம் அரசினர் பாடசாலைக்கு சமீபமாகவுள்ள சிறுவர் பாடசாலைக் கட்டடத்தோடு இணைந்த புதிய கட்டடத்தில் மக்கள் கடை ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் கூகாதார அபிவிருத்திக் கழகத் தலைவர் திரு. க. அருணாசலம் குத்துவிளக்கு ஏற்றி விற்பனையை ஆரம்பித்துவைத்தார்.

(ச ரி)


## Jaffna College Institute of Technology

VADDUKODDAI

The only fulltime technical Educational Institute in the North Providing Facilities of Hostel Library and Sports Extra Curricular Activities.

**1989 January இல்**

Radio, TV Servicing Technician Course (ஆங்கில மூலம்)

Practically Oriented
(செய்முறைப் பயிற்சித்திட்டம்)

ஆரம்பமாக உள்ளது.

கல்வித் தகைமை:- G C E O/L இல் ஆங்கிலம் கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றில் சித்தி.

வயது, பால்:- 18க்கு உட்பட்ட இருபாலாரும்

காலம்:- ஓராண்டு (2 Semester)

நிறுவன அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் மட்டுமே விண்ணப்பிக்கவும் பத்திரங்களை 5/- செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். —
(நேரடி தொடர்பு விரும்பத்தக்கது)

விண்ணப்ப முடிவு திகதி 04-01-1989

● நேர்முகப் பரீட்சை பின்னர் அறிவிக்கப்படும்.

Radio & TV Servicing

We Undertake Repairs of Radio, TV and Vidio Deck

— பணிப்பாளர்

(C-458)


## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. செல்லையா சபாரத்தினம்
[(முன்னைநாள் முகாமையாளர் ப. நோ கூ ச.)]

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13 2-1933 | 2 12 1987 |

நிலவழுதவானத்தில் சுவடேதுமில்லை
நினைவழுது வானத்தில் சுவடேதுமில்லை
வானழுத தண்ணீரில் உவர்ப்பேதுமில்லை
நாமழுத கண்ணீரில உவர்ப்பாறவில்லை.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், உறவினர்கள்.

பன்னாலை, தெல்லிப்பழை

(8152)

## சுங்கத் திணைக்கள அறிவித்தல்

1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதியும் ஏப்பிரல் 01 ஆம் திகதியும் படகுகள் மூலம் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த இலங்கையரிடமிருந்து இலங்கைக் கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டு கொழும்பு சுங்க திணைக்களத்தில் உள்ள சுங்க தடுப்பு அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொருட்கள் பற்றிய அறிவித்தல்

மேற்கூறிய விடயம் பற்றி சுங்கத் திணைக்களத்தின் கொழும்பு தலைமையலுவலகத்தில் உள்ள பிரதான சுங்க சேகரிப்பாளரிடமோ அல்லது யாழ் மாவட்ட சுங்கத் திணைக்களத்தின் சுங்கசேகரிப்பாளரிடமோ தடுத்து வைக்கப்பட்டுள்ள பொருட்கள் பற்றி உரிமை கோருவோர் இதுவரையிலும் உரிமை கோரி விண்ணப்பிக்காதிருப்பின் அல்லது வாக்குமூலம் அளிக்காதிருப்பின் இவைபற்றிய விண்ணப்பங்களை 31 12-1988க்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

த. கணநாதலிங்கம்
யாழ். மாவட்ட
சுங்கசேகரிப்பாளருக்காக.

யாழ். மாவட்ட
சுங்கத் திணைக்களம்
1988-11 29

(C 831)


உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலை வாய்ப்பினைப் பெறுவதற்கான

## கம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language

ஆரம்பம்: 5. 12. 88
பயிற்சிக்காலம்: 1 1/2 மாதம்
கட்டணம்:- 950/-
(இருபிரிவுகளாகச் செலுத்தலாம்)

COMPUTER PROGRAMMING IN dBASE III+

ஆரம்பம்: 6. 12. 88
பயிற்சிக்காலம்: 2 மாதம்
கட்டணம்: 1250/-
(பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் I B M. (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும் பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

UNIKCO COMPUTER CENTRE
No: 5, POWER HOUSE Rd,
2 nd LANE, JAFFNA.
(Near Sub - Post Office)

(C/833)



THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

A/L 90

(2 ஆவது புதிய பிரிவு)

டிசம்பர் 02 இல் ஆரம்பம்

| | |
|---|---|
| பொருளியல்: | திரு லோகசிங்கம் |
| கணக்கியல்: | திரு மரியதாஸ் |
| வர்த்தகம்: | திரு. தேவா |
| அளவையியல்: | திரு. விக்கி |
| இந்துநாகரிகம்: | திரு காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ்: | திரு. மநதலிங்கம் |
| அரசியல்: | திரு. ஸ்ரீறாப் |
| புவியியல்: | திரு. வேலாயுத பிள்ளை |

சகல பாடங்களும் அலகு 01 இல் இருந்து ஆரம்பிக்கப்படும்.

10ஆம் திகதிக்குப் பின் அனுமதிகள் வழங்கப்படமாட்டாது,

(C-830)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:-
15-6-1936

● ● ●

மறைவு:-
14-12-1987

● அமரர் சிவகுரு சிவசாமி ●
(பதில் பதிவாளர், நீதிமன்றம், திருகோணமலை

திதி : 2-12-1988

எங்கள் இதயத்தில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் அன்புத் தெய்வமே! எமக்கு நல்வழி காட்டி அன்பு, அறநெறி, பண்பு, பாசத்துடன் வாழ்ந்த தெய்வமே! இடை நடுவில் எங்களைக் கண்ணீர்க் கடலில் ஆழ்த்தி விட்டு இறைவனோடு இறைவனாய் இணைந்து விட்டீரோ? அப்பா, உங்கள் ஆத்மா சாந்தியடைய தினம், தினம் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செலுத்துகின்றோம்

நித்தம், நித்தம் உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி
அருமை மகள். பெருமகன்
உற்றார், உறவினர்கள்.

கந்தரோடை ரோட்,
மாசியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

(8000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

கேளிழுக்கம் கேளாக் கெழுதகமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின்.

**பொருள்:**

பழகிய நண்பர் செய்த தவறு பற்றிப் பிறர் சொன்னாலும் கேளாமலிருக்கும் உரிமை வல்லவர்க்கு, அந் நண்பர் தவறு செய்வாராளுல் அது பயனுள்ள நாளாகும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலை

இல:- 292/2 நாவலர்வீதி தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
02-12-1988 த. பெ. இல 23


## விரும்பாத அனுபவம்

நாட்டில் இராணுவ ஆட்சியை உண்டாக்கக்கூடிய சூழ்நிலை தோன்றி இருக்கிறது!

இவ்வாறு அவலக்குரல் எழுப்பி இருக்கிறார் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் திரு தினேஷ் குணவர்த்தன.

ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமான பிரசாரக் கூட்டம் ஒன்றில் வைத்தே அவர் இந்த அச்சத்தை வெளியிட்டு இருக்கிறார். என்றாலும் அவரது பயம் நியாயமானது என்பதை நாட்டு நடப்புகளை ஆழமாக நோக்கும் எவரும் உணரமுடியும்.

நாட்டின் மொத்தம் உள்ள 26 மாவட்டங்களில், 20 மாவட்டங்களில் இப்போது சிவில் நிர்வாகம் இல்லை! அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் இராணுவமே பொறுப்பேற்று நடத்துகிறது.

சிவில்நிர்வாகம் சரிவர நடக்காத நிலையில், இம்மாதம் 19ஆம் திகதி, நிச்சயிக்கப்பட்டவாறு ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியுமா என்ற நடைமுறைச் சிக்கல் பூதாகாரமாக எழுந்து நிற்கிறது.

நாடாளுமன்றத்தைக் கலைக்காவிட்டால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ரத்துச் செய்யாவிட்டால் வன்செயல்களைக் கைவிடப் போவதில்லை. இவ்வாறான ஒரு கடும் போக்கை அடம்பிடித்து நிற்பதாக ஜே. வி பி. கோடிட்டுக் காட்டிவருகிறது.

நாடாளுமன்றத்தைக் கலைப்பதில் என்ன கஷ்டம்? பதினொரு வருடங்கள் ஒரே தொடர்ச்சியாக இருந்து நாடாளுமன்றக் கதிரைகளுக்குச் சூடேற்றியது போதாதா? ஸ்ரீலங்கா சுதந்திரம் பெற்றதன் பின்னர், இதற்குமுன் இல்லாதவாறு தனியனிதர் கெடுபிடி ஆட்சி நடத்தியது இன்னும் போதாது என்ற நினைப்பா? நாடாளுமன்றத்தைக் கலைத்தால் எம்.பிக்களின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லையென்பதாலா? அவ்வாறாயின் ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் உயிர்த்தியாகம் செய்யட்டும் என்ற எண்ணமா?

நாட்டு நிர்வாகம் சீர்குலைந்துள்ள நிலையில், ஜனாதிபதித் தேர்தலை நடத்தமுடியாத இக்கட்டான சூழ்நிலையில், அவற்றைக் காரணங்காட்டி, ஜனாதிபதித் தேர்தலையும் ரத்துச்செய்துவிட்டு, இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் முகிழ்த்துள்ளன!

அதனைச் சரிவர உணர்ந்தே திரு. தினேஷ் குணவர்த்தன அவலக்குரல் எழுப்பி இருக்க வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அண்ணளவாகச் சொல்வதானால் 1978ஆம் ஆண்டிலிருந்தும், சரியாகக் கூறுவதானால் 1981ஆம் ஆண்டிலிருந்தும் அனேகமாக இராணுவ ஆட்சியின்கீழ் வாழ்வதுபோன்ற நிலைதான்!

இத்தனை வருடங்களாக அவர்கள் எத்தனை கெடுபிடிகளை அனுபவித்தார்கள் என்பது பெருந்தொகுதி மனித நாகரிகத்துக்கும், ஜனநாயக மரபுகளுக்கும் ஒவ்வாத முறையான அடடூழியங்கள், அடக்குமுறைகள் அவர்கள்மீது கட்டவிழ்த்து விடப்பட்டன!

தமிழ்மக்கள் மீது இராணுவ ஆட்சி (மறைமுகமாக) கட்டவிழ்த்து விடப்பட்டபோது அதுகுறித்துக் கவலைகொண்ட, கண்டனம் தெரிவித்த, எதிர்ப்புக் காட்டிய சிங்கள மக்கள், எம். பி.க்கள், தலைவர்கள் மிகச் சிலரே. தமிழர்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்; அவர்கள் கொட்டத்தை அடக்கவேண்டும் என்று கூறியவர்களே அதிகம்.

இப்போது நாடளாவிய ரீதியில் இராணுவ ஆட்சி வரலாம் என்று கிலிகொண்டு நடுங்குகிறார்கள் சிங்களத் தலைவர்கள்! இராணுவ ஆட்சி வராமல் தடுக்கச் சகல இன மக்களும் ஒன்றுபடவேண்டும் என்றும் அழைக்கிறார்கள். தலையிடி தனக்கு வரும்போதுதான் வேதனை தெரியும் என்பதை இவர்கள் உறுதிசெய்கிறார்களா என்ன?

மறைமுக இராணுவ ஆட்சியின் கோரத் தாண்டவத்தின் தாக்கத்தை அனுபவித்தவர்கள் தமிழர்கள். அதன் காயம் இன்னும் ஆறவில்லை. உத்தியோகபூர்வ நேரடி இராணுவ ஆட்சியின் தாக்கம் அதைவிட மோசமாக இருக்கும் என்பதனைத் தமிழ் மக்கள் உணர்வார்கள். ஆகையால் சிங்கள மக்களுக்கு அப்படி ஓர் அனுபவம் கிடைப்பதை அவர்கள் விரும்பவில்லை.

## அநேகமான மாணவர்கள் சித்தி

மண்டைதீவு. டிச.2

மண்டைதீவு மகாவித்தியாலயத்தில் இம்முறை ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் அநேகமான மாணவர்கள் சித்தி அடைந்துள்ளார்கள்.

பதினைந்துக்கு மேற்பட்ட மாணவர்கள் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு (கலைப் பிரிவு) படிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

புதுடில்லி ஹோட்டல் அறையில் வைத்து

# உளவு பார்த்த பாகிஸ்தான் பிரிகேடியர் கைது!

# தகவல் கொடுத்த இந்தியரும் பிடிபட்டார்!!

## பாகிஸ்தான் அரசு அதிர்ச்சி

புதுடில்லி, டிச 1

உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தான் இராணுவ அதிகாரி ஒருவரை இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்து காவலில் வைத்தனர்.

கைது செய்யப்பட்ட சமயம் அந்த அதிகாரியுடன் இந்தியப் பிரசை ஒருவரும் இருந்தார்.

இந்தியப் பாதுகாப்பு சம்பந்தமான முக்கிய தஸ்தாவேஜுகளை பாகிஸ்தான் அதிகாரியிடம் இந்தியப் பிரசை கையளித்தபோதே இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் இருவரையும் கைது செய்தனர்.

புதுடில்லியில் ஹோட்டல் அறை ஒன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட பாகிஸ்தான் இராணுவ அதிகாரி, பிரிகேடியர் என்றும்.

இரண்டாண்டுகளுக்கு முன்னர் மறைந்த அதிபர் ஸியா-உல்-ஹக்கினால் புதுடில்லியில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்ற அனுப்பி வைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து பாகிஸ்தான் அரசு அதிர்ச்சி தெரிவித்துள்ளது.

காவலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரியை புதுடில்லியில் உள்ள அவரின் வீட்டுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் பாகிஸ்தான் இந்திய அரசைக் கேட்டுள்ளது.

அரபாத் விஸா மறுப்பு:

# மனதை மாற்றிக் கொள்ள அமெரிக்காவுக்கு ஐ.நா. சபை 24 மணித்தியால காலக்கெடு!

ஐ நா டிச 1

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்துக்கு விஸா மறுத்த விஷயம் தொடர்பாக அமெரிக்கா தனது மனதை மாற்றிக் கொள்ள ஐ.நா பொதுச் சபை 24 மணித்தியால காலக்கெடு வழங்கியிருக்கிறது.

அரபாத்துக்கு விஸா வழங்க தொடர்ந்து அமெரிக்கா மறுத்தால் பலஸ்தீனம் பற்றிய விவாதத்தை நடத்த ஐ.நா. தனது விசேட கூட்டத்தை ஜெனிவாவில் நடத்தும் என்றும் தெரியவருகிறது.

24 மணித்தியாலங்களின் பின்னர் அமெரிக்காவின் முடிவு எப்படி அமைகிறது என்பதைப் பொறுத்து ஜெனிவாவுக்குக் கூட்டத்தை இடமாற்றஞ் செய்யும் பிரேரணை பொதுச்சபைக் கூட்டத்தில் ஜோர்தான் கொண்டு வரும்.

அமெரிக்காவுக்குக் காலக்கெடு வழங்கும் பிரேரணையை எதிர்த்து அமெரிக்காவும் இஸ்ரவேலும் மட்டுமே வாக்களித்தன.

பிரிட்டன் நடுநிலை வகித்தது. (எ)

### மாலைதீவில் இந்தியத் துருப்புக்கள்

புதுடில்லி டிச 1

மாலைதீவில் 350 இந்தியத் துருப்புக்கள் உள்ளனர்.

மாலைதீவு அரசு தனது பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்திய பின்னர் அவர்கள் திருப்பி அழைக்கப்படுவர்.

அதுவரை அவர்கள் மாலைதீவில் தங்கி இருப்பர். இப்படி இந்திய வெளியுறவு அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் லோக சபையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். (எ)

# அ.தி.மு.க இரட்டை இலைத் தேர்தல் சின்னம்; ஜா-ஜெ அணிகள் இழுபறி நீடிக்கிறது!

புதுடில்லி, டிச 1

அ. தி மு கவின் தேர்தல் சின்னம் பற்றிய விசாரணையில் மீண்டும் ஒரு திருப்பம் ஏற்பட்டுள்ளது.

இரட்டை இலைச் சின்னத்தை ஜெயலலிதா அணிக்கே வழங்கவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு புதுடில்லி சென்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு மனு சமர்ப்பித்திருக்கிறார்.

ஜெயலலிதா அணியில் மீண்டும் சேர்ந்து பொருளாளராக நியமனம் பெற்ற பின்னரே திருநாவுக்கரசு இந்த மனுவைச் சமர்ப்பித்தார்.

ஜெயலலிதா அணியில் இருந்து விலகி நாவலர் அணியில் இருந்த சமயமும் திரு திருநாவுக்கரசு ஒரு மனுவை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்து இருந்தார். அந்த மனுவில் "உண்மையான அ.தி.மு.க ஜானகி தலைமையில் தான் இயங்குகிறது. ஜெயலலிதா அணிக்கு அந்த உரிமை இல்லை. ஆகவே இரட்டை இலைச் சின்னத்தை ஜானகி அணிக்கே வழங்கவேண்டும்"— என்று அந்த மனுவில் அவர் கேட்டு இருந்தார்.

புதிதாக இப்போது சமர்ப்பித்துள்ள மனுவில் திருநாவுக்கரசு கூறியிருப்பதாவது;

எம். ஜி ஆரின் பின்னர் மக்களின் தலைவர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருப்பவர் ஜெயலலிதா தான்.

அ. தி. மு. கவின் உறுப்பினர்கள் ஜெயலிதாவின் பின்னால்தான் அணி திரண்டுள்ளனர்.

கடந்த இரண்டுமாதங்களாக நான் அ. தி.மு. கவின் எப்பிரிவுக்கு ஆதரவு உண்டு என்பதை ஆராய்ந்து பார்த்தேன். ஜெயலலிதாவின் அ. தி. மு. க தான் உண்மையான அ. தி. மு. க என்பதைப் புரிந்து கொண்டேன். ஆகவே இரட்டை இலைச் சின்னத்தை ஜானகி அணிக்குக்கொடுக்கவேண்டும் என்ற என் முந்தைய மனுவை வாபஸ் வாங்குகிறேன். நான் தவறாக வழி நடத்தப்பட்டதால் தான் ஜெயலலிதாவுக்கு வழங்கிய ஆதரவை விலக்கிக் கொண்டேன். அச்சமயம் ஜெயலலிதா மீது நான் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் தேவையற்றவை என்பதை நான் இப்போது அறிந்து கொண்டேன்"—

இப்படி திரு. திருநாவுக்கரசு தனது மனுவில் விவரித்துள்ளார். (எ)

## சீன அமைச்சர் மாஸ்கோ பயணம்

மாஸ்கோ, டிச.1

சீன வெளியுறவு அமைச்சர் மாஸ்கோ சென்றார்.

சீனாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே 1960ஆம் ஆண்டில் சித்தாந்த வேறுபாடுகள் தோன்றின.

அதன் பின்னர் சீன அமைச்சர் ஒருவர் மாஸ்கோ செல்வது இதுவே முதல் தடவையாகும். (எ)

### தமிழகத்தில் 2ஆவது அணு ஆலை

புதுடில்லி, டிச. 1

தமிழ்நாட்டில் கூடாமங்கலம் என்னுமிடத்தில் அணு ஆலை ஒன்றை அமைக்க மத்திய அரசு முடிவு செய்து இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆலை அமைப்பதினால் கசிவு அபாயம் ஏற்பட்டு சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### சூறாவளியில் 400 பேர் பலி!

டாக்கா, டிச. 1

பங்களாதேஷை நேற்று முன்தினம் 160 மைல் வேகத்தில் தாக்கிய சூறாவளியில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 400க்கு மேல் உயர்ந்திருக்கிறது.

நூற்றுக்கணக்கானோரைக் காணவில்லை என்று தெரிகிறது. 2 லட்சம் பேர் வீடிழந்தனர்.

மேற்கு வங்காளத்தில் 80 பேர் உயிரிழந்தனர். (எ)

### எய்ட்ஸ் தடுப்புக்கு 6கோடி ரூபா

புதுடில்லி டிச 1

எய்ட்ஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளுக்கென இந்திய அரசு 6 கோடி ரூபாவை ஒதுக்கியிருக்கிறது. (எ)

### 'விக்ராந்' புதுப்பித்தல்

புதுடில்லி, டிச.1

இந்தியாவின் விமானந் தாங்கிக் கப்பலான 'விக்ராந்' 21கோடி ரூபா செலவில் புதுப்பிக்கப்பட இருக்கிறது.

அதன் பின்னர் இரண்டாவது விமானந் தாங்கிக் கப்பலான 'விராட்' நவீன மயப்படுத்தப்படும் என்று புதுடில்லியில் கடற்படைத் தலைமையலுவலகம் அறிவித்தது. (எ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்

## அரசியல் கைதிகளை விடுதலை செய்க

### ஸ்ரீமாவோ கோரிக்கை

கொழும்பு. டிச. 2

ஜனாதிபதித்தேர்தலுக்கு முன்னால் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றேன்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அகலவத்தை, பேருவளை ஆகிய இடங்களில் நடந்த பிரசாரக் கூட்டங்களில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

நான் ஜனாதிபதியானால் முதல் வேலையாக நாடாளுமன்றத்தைக் கலைப்பேன். துரதிஷ்டவசமாக பிரதமர் பிரேமதாஸ ஜனாதிபதியானால் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் நாடாளுமன்றத்தின் ஆயுளை பேலும் 5 ஆண்டுகளுக்கு நீடிப்பார் இதுபற்றி வாக்குறுதி ஒன்றை அரசு எம்.பிக்களுக்கு அவர் அளித்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தல் நியாயமான முறையில் நடந்தால், நான் 10 லட்சம் வாக்குகள் பெரும்பான்மையுடன் வெற்றியீட்டுவேன். எனது கூட்டங்களுக்குத் திரண்டு வரும் மக்களை வைத்து இதை நான் கூறுகிறேன்.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (ஒ ஏ)

### தமிழ்மொழிக்குரிய மதிப்பை வழங்கநாம் முன்வரவேண்டும்

சுழிபுரம், டிச. 2

தமிழ் மொழிக்குரிய மதிப்பை முதலில் நாமே வழங்க முன்வரவேண்டும். "வெல்க" என்று திருமணப்பந்தலில் எழுதும் வழக்கம் மாறி நல்வரவு என்று எழுதச்செய்யவேண்டும்.

வேற்று மொழியினர் யாரும் இல்லாத எமது இடங்களில் உள்ள வியாபார நிறுவனங்களின் பெயர்ப் பலகைகள் தமிழ் மொழியில் எழுதப்படவேண்டும் தமிழ் பண்பு, கலாசாரம் யாவும் அழியாது காப்பது நம் கடமையாகும்.

இவ்வாறு பண்ணாகம் கலைமன்றத்தின் பதினெட்டாவது ஆண்டு பொதுக்கூட்டத்தில் பேசிய பண்டிதர் ப இராசகுரு குறிப்பிட்டார்

மன்றத்தலைவர் செல்வன் ஆ இலகுப்பிள்ளை கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

மன்றத்தின் தலைவராகச் செல்வன் வே. குமரகுரு தெரிவுசெய்யப்பட்டார். (ச-ரி)

கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரண

## விண்ணப்ப படிவம் செயலகத்தில் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச 2

கடும் பாதிப்புற்றோருக்கான நிவாரண விண்ணப்பப் படிவங்கள் யாழ் செயலகத்தில் தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சங்கானை, சண்டிலிப்பாய் தெல்லிப்பழை, ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான நிவாரண விண்ணப்பப் படிவங்கள் புதன்று வழங்கப்பட்டன. சுமார் 200 பேர்வரை விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுச் சென்றனர்.

வேலணை ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு இன்று முதல் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

### வீதிகள் புனரமைப்பு

கரவெட்டி டிச 2

மாதனைவீதி தம்பளை, திகிரிவீதி, தப்பசிட்டி வீதி, பருத்தித்துறை புனித தோமையார் வீதி, சலவிவீதி, மணல்வீதி போன்ற வீதிகளைத் திருத்திப் புனரமைப்புச் செய்வதற்கான துரிதநடவடிக்கையை நகரசபைச் செயலாளர் திரு க. [illegible] மேற்கொண்டுவருகிறார். (ச-70)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிச 2

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று (2ஆம்திகதி) காலை ஒன்பது மணிக்கு நடைபெறும்.

யாழ். கல்வித் திணைக்களத்தின் பிரதம கல்வி அதிகாரி திரு.கே சந்தசாமி இந்த வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் (ஐ)

### "ஒளிவிழா"

குருநகர் டிச 2

யாழ். சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வண. பிதா பி. எம் இம்மானுவல் அடிகளார் தலைமையில் ஒளிவிழா நடைபெறும்.

கிறிஸ்து பிறப்பு மாதத்தை ஒட்டி நடைபெறும் ஒளிவிழா வைபவத்தில் மாணவர்களது இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் இடம்பெறும் (சி-51)

### வணிகஜோதி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், டிச 2

யாழ் கனகரத்தினம் மத்தியமகாவித்தியாலய வணிக மலரான 'வணிகஜோதி'யின் பதின்மூன்றாவது வெளியீட்டுவிழா இன்று 2ஆம் திகதிவெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில மன்றத்தலைவர் செல்வன் சி சுதாகரன் தலைமையில் நடைபெறும்.

இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ஆர். சச்சிதானந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (ச)

## சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு நத்தார் பண்டிகை முற்பணம்

யாழ்ப்பாணம், டிச 2

சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு எதிர்வரும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு பண்டிகை முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தத் தகவலை யாழ். சுகாதாரத் திணைக்கள பிரதம கணக்காளர் உதயனுக்குத் தெரிவித்தார்.

சுகாதாரத் திணைக்கள ஊழியர் பலர் கடந்த தீபாவளிப் பண்டிகைக்கு இந்தப் பண்டிகை முற்பணக் கொடுப்பனவை பெற விண்ணப்பித்திருந்தனர்.

ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் பிரஸ்தாப கொடுப்பனவை வழங்க முடியாமல் போனது.

இதற்கு மேலிடத்திலிருந்து உரிய நேரத்தில் அனுமதி கிடைக்காததே காரணம்

இந்த அனுமதி காலம் தாழ்த்தியே கிடைத்திருந்தது. இதனை அடுத்தே இந்தக் கொடுப்பனவை எதிர்வரும் நத்தார் பண்டிகைக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார்.

சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு 89ஆம் ஆண்டில் எந்தக் கடன் சலுகையும் வழங்கப்படமாட்டாது என அண்மையில் சுகாதாரத் திணைக்களத்தினால் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது ஒரு தற்காலிகமான முடிவு மட்டுமே ஆகும். சுகாதார அமைச்சுக்கு போதிய நிதி வசதி கிடைத்ததும் இந்த முடிவு கைவிடப்படும் என்று அவர் கூறினார். (இ-9)

உணவு முத்திரையாளரின்:

## வீடமைப்புக் கடனை வறுமை நிதியிலிருந்து செலுத்த ஏற்பாடு

பச்சிலைப்பள்ளி, டிச 2

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடமைப்புக் கடன் பெற்ற உணவு முத்திரை வைத்திருப்பவர்களின் கடன் தவணைப்பணங்களை வறுமை ஒழிப்புத்திட்ட நிதியிலிருந்து செலுத்துவதற்கு கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றை கிளிநொச்சி மாவட்ட சிக்கனகடன் வழங்க கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தனது பிரிவில் உள்ள சகல சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சமாசச் செயலாளர் செல்வி சாந்தநாயகி கந்தையா தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லி கலந்த கோப்பி

யாழ்ப்பாண முறைப்படி தயாரிக்கப்பட்ட மல்லிக் கோப்பி இப்போது 100 gr. பக்கட்டுக்களில் வெளி வருகிறது.

1 பக்கட் விலை 10/- ரூபா. வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

அண்ணா கோப்பிக்கடை

யாழ்ப்பாணம்.



# உதயன்

[02 - 12 - 1988 வெள்ளிக்கிழமை



உழுந்து மா

பப்படம், தோசை, வடை முதலிய தேவைக்கு பாவிக்கக் கூடிய சுத்தமாகவும் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டும் விற்பனையாகிறது.

தொகையாக ஓடர் செய்பவர்களுக்கு

★ விசேட கழிவு உண்டு. ★

அண்ணா கோப்பிக்கடை

யாழ்ப்பாணம்.


## சட்டம், ஒழுங்கை பாதுகாப்பது எமது பொறுப்பு

### வரதராஜப்பெருமாள் பேட்டி

கொழும்பு டிச 2

டிசம்பர் 5 இல் பதவி ஏற்ற பின்னர் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் சட்டம்—ஒழுங்கை நிலை நாட்டுவது எங்கள் பொறுப்பு. இந்திய அமைதிப்படை எமக்கு உதவி செய்யும்.

முதலமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள திரு. அ. வரதராஜப்பெருமாள் கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் இப்படித் தெரிவித்தார்

குடிமக்கள் தொண்டர் படையில் சேர்ந்துள்ள 800 பேருக்கு இந்திய அமைதிப்படை பயிற்சி வழங்கி வருகிறது. சென்ற 5ஆம் திகதியில் இருந்து இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாக் காடுகளில் கெரில்லாத்தாக்குதல் நடத்தத் தயாராகி வரும் 450 விடுதலைப்புலிகளை இப்படை சமாளிக்கும்.

குடிமக்கள் தொண்டர் படையில் ஈ. பி ஆர். எல். எவ். ஈ. என்; டி. எல். எவ். ரெலோ இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். அடுத்த வாரத்தில் இருந்து புதிய மாகாண அரசு இப்படையை விடுதலைப் புலிகளைச் சமாளிக்கவும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்கி புனர் வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தும்—

— இப்படி திரு. வரதராஜப்பெருமாள் சொன்னார். (உ-எ)

## இன்று நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம் டிச 2

தீவுப் பகுதிக்கான திருமணப் பதிவாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை இன்று காலை 10 – 30 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது (ஓ-9)

## ரூ. 1000 நிவாரணம்:

## செயலகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட பட்டியல்

யாழ்ப்பாணம், டிச.2

மீளக்குடியமர்தல் நிவாரணமாக ஆயிரம் ரூபாவை பெறத்தகுதியுடைய மேலும் 1737 குடும்பங்களின் பெயர்ப் பட்டியல் நேற்று யாழ் செயலகத்தினால் வெளியிடப்பட்டது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உயரப்புலம், சில்லாலை, மாதகல் ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் 453 குடும்பங்களும்—

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மயிலிட்டி தெற்கு, கட்டுவன், குரும்பசிட்டி, நகுலேஸ்வரம், பன்னாலை, பலாலி மேற்கு, வயாவிளான், கொல்லங்கலட்டி, வீமன்காமம், அளவெட்டி, தெல்லிப்பளை ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளில் 1284 குடும்பங்களும் இந்தப் பட்டியலில் அடங்குகின்றன.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையினூடாகவும், தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையினூடாகவும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான காசோலைகளும் பட்டியல்களும் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அடுத்த வாரத்தில் அனுப்பி வைக்கப்படும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ 5)

## மீளக் குடியேறியோருக்கு அரச அதிபரின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிச 2

இந்தியா விலிருந்து கப்பல் மூலம் நாடு திரும்பியவர்களில் சண்டிலிப்பாய், வேலணை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் மீளக் குடியேறியோர் அந்தந்தப் பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்குச் சமுகம் தருமாறு யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சண்டிலிப்பாய் உ. அ. பி சேர்ந்தவர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதியும் வேலணை உ. அ. பி. சேர்ந்தவர்கள் 8 ஆம் திகதியும் கோப்பாய் உ. அ. பி. சேர்ந்தவர்கள் 9ஆம் திகதியும் சமுகம் அளிக்க வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி உரிய ஆவணங்கள் அனைத்தையும் எடுத்துச் செல்ல வேண்டும் (ஒ-9)

## விசேட ஜனாதிபதி ஆணைக்குழுச் சட்டம்ரத்தாகாது

கொழும்பு, டிச 2

விசேட ஜனாதிபதி ஆணைக் குழுச்சட்டம்ரத்துச்செய்யப்படமாட்டாது.

அதற்குப் பதில் அச் சட்டத்துக்குத் திருத்தம் ஒன்றை நாடாளுமன்றத்தில் அரசு கொண்டு வரும்.

பிரதம நீதியரசரே, ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிக்கவும், ஆணைக் குழுநிரந்தரமாக இயங்கவும் திருத்தச் சட்டம் வழிவகுக்கும்

இது சம்பந்தமான யோசனையை அமைச்சர் லலித் அத்துலத் முதலி அமைச்சரவைக் கூட்டத்தில் கொண்டு வந்தார். அதனை ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஏற்றுக்கொண்டார்.

இச்சட்டத்தை ரத்துச் செய்யும் முடிவை எதிர்த்தே பிரதி அமைச்சர் ஷெல்டன்ரணராஜா ராஜினாமாச் செய்திருந்தார்.

(ஒ-எ)



## நன்றி நவிலல்

### திரு. C. இராமநாதன்

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

15-10-88 இல் நடைபெற்ற இவரது ஈமச் சடங்குகளில் கலந்துகொண்டவர்களுக்கும், மலர் வளையங்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், எங்கள் துயரத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், யாழ் போதனா வைத்தியசாலை 6 ஆம் வாட்டில் அவருக்கு வைத்திய சேவைகள் செய்த அனைவருக்கும், மேலும் 12-11-88 இல் நடைபெற்ற அன்னாரது அந்தியேட்டிக் கருமங்களில் கலந்து கொண்ட உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்

திருமதி இராமநாதன்,
மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள்.

(7998)

## இடதுசாரிக்----

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

டுரவை மனதில் வைத்துக்கொண்டு, தமிழ் மக்கள் மீது அதிக அக்கறை வைத்துக்கொள்வது போல் வெறும் வாக்குறுதிகளை மாத்திரம் அள்ளி வீசுபவர்களையும் நாம் நம்பத் தயாரில்லை.

தமிழ்பேசும் மக்களுக்கு அக் கட்சியின் நிலைப்பாடு தெட்டத் தெளிவாகத் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

இனப் பிரச்சினை தொடர்பான தீர்வுகளை தெளிவாக முன்வைக்குமாறு திரு. வை பி டி. சில்வாவிடம் நான் கேட்டுக்கொண்டேன்

இதே வேளையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஏனைய கட்சிகளும் எம்முடன் தொடர்பு வைத்துள்ளன.

காலஞ்சென்ற திரு. விஜேகுமாரணதுங்க இருந்த காலத்திலேயே மக்கள் கட்சியுடன் எமக்குத் தொடர்பு இருந்து வந்தது.

தமிழ் பேசும் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை முற்போக்குச் சிந்தனையுடன் தீர்த்து வைக்கக்கூடிய தலைமைத்துவம் அன்று அவரிடம் காணப்பட்டது.

அவரின் கொள்கைகளை நிலைநாட்டவே திரு ஒஸி அபேகுணசேகராவைத் தேர்தலில் போட்டியிட வைத்திருப்பதாகவும் திரு. வை. பி. டி சில்வா என்னிடம் தெரிவித்தார் -- என்றார். (ஐ)

## தடை

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சர்வதேச, உள்நாட்டுப் பிரிவுக் சட்டடங்களுக்குள் பார்வையாளர்கள் பிரவேசிப்பது நேற்று முதல் தடை செய்யப்பட்டது. (எ)

## இந்திரா....

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

புதிய மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் நேற்று மாலை தாக்கல் செய்யப்பட்டன

இதேவேளை இரண்டு எதிரிகளும் தூக்கிலிடப்படும் தினத்தில் இருந்து ஏழு தினங்களுக்குத் துக்கதினம் அனுஷ்டிக்கும்படி உலகில் உள்ள சீக்கியர்களை பஞ்சாபில் உள்ள சீக்கிய மதஸ்தாபனங்கள் கோரியுள்ளன. (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் செல்லத்துரை

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சுப்பிரமணியம் செல்லத்துரை 28-11-88 அன்று காலமாகி விட்டார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 03- 12- 88 சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அழகரட்ணம்.

குபேரபுரி,
உடுவில்,
மானிப்பாய். (7777)

### திருமதி இராசேஸ்வரி இளையப்பு

திருமதி. இராசேஸ்வரி இளையப்பு காலமாகி விட்டார். இவர் யாழ். அரசாங்க செயலக முன்னாள் உத்தியோகத்தரும், யாழ்-மாவட்ட சமாதான நீதிவானுமாகிய கோப்பாய் M.K. இளையப்பு அவர்களின் அன்பு மனைவியும், குமாரகுலசூரியன் இலங்கை ரயில்வே திணைக்களம் மாங்குளம்) கிருபாகரசூரியன் (முன்னாள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) செல்வராணி, திலகராணி (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதிகள் ஸ்ரீவதனி, சசிந்திரா (அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமியாரும், சுரேந்திராவின் அன்புப் பாட்டியுமாவார், அன்னாரது ஈமக்கிரியைகள் 02-12-88ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(8159) தகவல்: M. K. இளையப்பு J.P.

பளை சேமன்

### சின்னத்துரை குணரத்தினம் (குணம்)

(பிரபல வர்த்தகரும், கிருஷ்ணா சோ மில் உரிமையாளரும்)

பளையைச் சேர்ந்த சேமன் சின்னத்துரை குணரத்தினம் (குணம்) நேற்று (1-12 88) அகால மரணமானார். இவர் கமலாவின் அன்புக் கணவராவார். இவரது ஈமைக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

விஷ்ணு மஹால்,
பளை. [C-860]

தகவல்:
மனைவி.


★ கலைக்கதம்பம் ★

வானொலி நேயர்களின்...

வெகுநாளைய ஆவலைப் பூர்த்தி செய்யுமுகமாக

4-12-88 முதல் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நண்பகல் 12.15 முதல் 12.45 வரை

"கலைக்கதம்பம்"

எனும் நிகழ்ச்சியை

உங்கள் அபிமானத்திற்குரிய

'ஷப்ரு' யுனிக்கோ பினான்ஸ்

நிறுவத்தினர் அளிக்கவுள்ளனர்.

● இந் நிகழ்ச்சியின் பிரதான அம்சமாக

திரு. கே. எஸ், பாலச்சந்திரனால் எழுதப்பட்டு

உங்கள் அபிமானத்துக்குரிய
வானொலிக் கலைஞர்கள் பலர் பங்குபற்றும்

மண்வாசனை மிக்க

★ கிராமத்துக் கனவுகள் ★

எனும் புதிய தொடர் நாடகம்
முற்றிலும் புதிய பாணியில் அறிமுகமாகின்றது

இத்துடன் மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு
வருமுகமாக பாடசாலைகளுக்கிடையிலான

★ உங்களுக்குத் தெரியுமா? ★

எனும் போட்டி அரங்கமும் இந்நிகழ்ச்சியில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்களை
அவர்கள் வகுப்பாசிரியரினூடாக
எம்முடன் தொடர்பு கொள்ளும்படி

★ அன்புடன் அழைக்கின்றோம். ★

ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.,

61, பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு-4.
தொலைபேசி: 589310, 500576.

யாழ். முகவரி:
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805.



உடனடி வேலைவாய்ப்பு

★ மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுவிட்ட ★

★வீடியோ கலா மினி★

ஸ்தாபனத்தார் அறிமுகப்படுத்தும்

புதிய முயற்சியும் — பயிற்சியும்

ஆம்! நவீன ரக கமராக்கள் நான்கினைக் கொண்டு, மிக்ஷர் சாதனத்தின் உதவியுடன் உங்கள் மங்கள நிகழ்ச்சிகள் யாவற்றையும் வண்ணப் படமாக்குவதில் வல்லவர்களான வீடியோ கலா மினிஸ்தாபனத்தார் வழங்கும் தொழில் வாய்ப்பு அழகுக்கு மெருகூட்டும் கலையில் வல்லவர்களான இளம் பெண்களை யாழ் குடாநாட்டில் முதன் முறையாக வீடியோ படப்பிடிப்புக் கலைக்கென பயிற்சியளித்து திறமையானவர்களைத் தெரிவு செய்யவுள்ளோம்.

★ ஒரு வார காலப் பயிற்சி
★ பயிற்சியின் பின் தெரிவு
★ திறமைக் கேற்ற சம்பளம்

விண்ணப்பிக்கவும்:-

வீடியோ கலா மினி

மத்திய சந்தை உட்புறம்
அச்சுவேலி.

கிளை:
டச்றோட், சாவகச்சேரி.

S. M. T. மணப்பந்தல் சேவை

★ தகரப்பந்தல்கள் ★ மணப்பந்தல்கள்
★ அலங்கார சோடனைப் பொருட்கள் ★
★ சுழல் நாற்காலி ★ அலங்கார ஊஞ்சல்
★ கதிரைகள்

என்பவற்றையும் இதனுடன் இணைந்த சேவையாக
வழங்கி எமது படப்பிடிப்புக்கு மென் மேலும் மெருகூட்டுகின்றோம்

★ ஒன்றிணைந்த சேவை ★ குறைந்த செலவு

★ நிறைந்த திருப்தி ★

அனைத்திற்கும் ஒரே இடம்

உங்கள் ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்து ஏமாற்றத்தைத்
தவிர்த்துக் கொள்ளுங்கள்.

"வீடியோ கலா மினி"

அச்சுவேலி.

(C/844)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் ... நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 02 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna. on Friday 2nd December 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org